# போர்ட் ஸெய்ன்ட் ஜார்ஜ் கெஜெட்

**I-வது பாகத்தின் ஸப்ளிமெண்ட்.**

**SUPPLEMENT TO PART I OF THE FORT ST. GEORGE GAZETTE,**

JANUARY 17, 1922.

நெ. 3.] மதராஸ் : செவ்வாய்க்கிழமை மாலை, 1922-ம் வருஷம் ஜனவரி மீ 17வ. [விலை, 1 அ


## கவர்ன்மெண்ட் விளம்பரங்களின் தமிழ்மொழிபெயர்ப்பு.

## Tamil Translations of Notifications by Government.

---

### லா டிபார்ட்மெண்ட்.

(ஜெனரல்.)

---

### விளம்பரம்.

போர்ட் ஸெய்ன்ட் ஜார்ஜ், 1921-ம் வருஷம் அக்டோபர் மீ 19வ.

நெ. 464.—(1914-ம் வருஷத்து 8-வது ஆக்டாகிய) 1914-ம் வருஷத்திய இந்துதேசத்து மோட்டார் வண்டிகளாக்ட் 11-வது பிரிவினுல் கொடுக்கப்பட்ட அதிகாரங்களைக்கொண்டு, ஆலோசனை சபையிலுள்ள கவர்னரவர்கள் - சென்னை ராஜதானிப்பட்டணத்தின் மியுனிஸிபல் ஹத்துக்குள்ளும் அதற்கு சமீபத்திலும் இருக்கும் பொதுவான இடங்களிலே வாடகைக்கு விடப்படுகிற அல்லது வாடகைக்கு ஓட்டப்படுகிற மோட்டார் வண்டிகளென்னும் தானே இயங்கும் சக்தியமைந்த வண்டிகளை உபயோகிப்பதைப்பற்றி ஒழுங்கேற்படுத்துவதற்காக அடியிற்கண்ட விதிகளைக் களிகூர்ந்து பிறப்பிக்கிறார்கள்.

1921-ம் வருஷத்திய சென்னபட்டணத்து வாடகை மோட்டார் வண்டிகளைக்குறித்த விதிகள்.

1. இந்த விதிகளின் காரியத்துக்காக 'வாடகை மோட்டார் வண்டி' அல்லது 'டாக்ஸி காப் என்னும் செலுத்தவேண்டிய சத்தத்தைக் காட்டும் கருவியமைக்கப்பெற்ற வாடகை வண்டி' என்பது - சென்னை ராஜதானிப்பட்டணத்தின் மியுனிஸிபல் ஹத்துக்குள் வாடகைக்கு விடப்படுகிறதாய் அல்லது வாடகைக்கு ஓடிக்கொண்டிருக்கிறதாய், வண்டி ஓட்டுகிறவர் உட்பட ஏழு பிரயாணிகளுக்கு மேற்படாமல் உட்காருவதற்கு இடம் ஏற்படுத்தியிருப்பதும் பாரம் இறக்கிவிட்டால் இரண்டு டன்னுக்கு மேற்படாமல் எடையுள்ளதுமான மோட்டார் வண்டி என்று அர்த்தமாகும்.

2. 1916-ம் வருஷத்திய சென்னபட்டணத்து மோட்டார் வண்டிகளைக்குறித்த விதிகளில், இந்த விதிகளிலுள்ள நிபந்தனைகளுக்குப் பொருத்தமற்றவைகளாயிராத விதிகள் - வாடகைக்கு விடப்படுகிற அல்லது வாடகைக்கு ஓடிக்கொண்டிருக்கிற மோட்டார் வண்டிகளுக்குப் பிரயோகப்படும்.

3. எந்த மோடார் வண்டியும் - சென்னை பொலீஸ் கம்மிஷனரால் அந்த வண்டியின் சொந்தக்காரருக்குக் கொடுக்கப்பட்ட ஒரு அனுமதிச்சீட்டின்றி சென்னை ராஜதானிப்பட்டணத்தின் மியுனிஸிபல் ஹத்துக்குள் வாடகைக்கு விடப்படவுங்கூடாது வாடகைக்கு ஓட்டப்படவுங்கூடாது.

4. இந்த அனுமதிச்சீட்டானது - இந்த விதிகளைச்சேர்ந்த முதலாவது ஷெட்யூலில் கண்ட டாக்ஸி A நமூனாப்படி இருக்கவேண்டும். அந்த அனுமதிச்சீட்டுக்குக் கட்டணம் ரூ. 5 ஆகும். 6-வது விதிக்குட்பட்டு, அப்படிப்பட்ட அனுமதிச்சீட்டானது - அது கொடுக்கப்பட்ட தேதியிலிருந்து அதற்கடுத்த மார்ச்மீ 31வ வரையில் செலாவணியாய்க்கொண்டிருக்கும். அந்த அனுமதிச்சீட்டானது - கம்மிஷனரின் உத்தரவின்படிக்கன்றி மற்றப்படி வேறொருவருக்கு மாற்றப்படத்தக்கதல்ல. அந்த உத்தரவு ஷ சீட்டின் மேல் எழுதப்படும்.

இந்த அனுமதிச்சீட்டானது - 1916-ம்ஹூ்த்திய சென்னபட்டணத்து மோடார் வண்டிகளைக்குறித்த விதிகளில் 30-வது விதியில சொல்லியிருக்கும் அனுமதிச்சீட்டிற்கு பர்த்தியானதாகும்.

5. வாடகைக்கு விடப்படுகிற அல்லது ஓட்டப்படுகிற யாதொரு மோடார் வண்டியின் சத்தம் அல்லது வாடகை வீதங்கள அல்லது அது காத்துக்கொண்டிருப்பதற்கான வீதங்கள் - இந்த விதிகளுடன் சேர்க்கப்பட்டிருக்கும் இரண்டாவது ஷெட்யூலில் நிர்ணயிக்கப்பட்ட வீதங்களுக்கு அதிகமாக இருக்கக்கூடாது ஆனால், யாதொரு வாடகை மோடார் வண்டியின் சொந்தக்காரரும வாடகைக்கு அமர்த்திக்கொள்பவருமாக உடன்பட்டு ஏற்படுத்திக்கொள்ளும் சத்தத்துக்கு ஒரு முழுதினத்துக்குக் குறையாத கால அளவுகளுக்காவது சென்னபட்டணத்து மியுனிஸிபல ஹத்துக்கு வெளியே பத்து மைலுக்குமேல் செல்லவேண்டிய பயணங்களுக்காவது ஷ சொந்தக்காரர் தம்முடைய வண்டியை வாடகைக்கு விடுவதாக ஒப்பந்தம செய்துகொள்வதற்கு இந்த விதிகளிற்கண்டதெதனாலும் தடை உண்டாகமாட்டாது.

6. வாடகை மோடார் வண்டியாக உபயோகிக்க உத்தேசிக்கப்படும் ஒவ்வொரு மோடார் வண்டியும் - பார்வையிடப்படுவதற்காகப் பொலீஸ் கம்மிஷனர் ஆபிஸுக்குக் கொண்டுபோகப்பட்டு, பொலீஸ் கம்மிஷனர் நிர்ணயிக்கக்கூடிய காலங்களில் பரிசோதனை செய்யப்படுவதற்குள்ளாகும்; மேலும, ஷ வண்டியானது - இந்த விதிகளில் அல்லது 1916-ம்ஹூ்த்திய சென்னபட்டணத்து மோடார் வண்டிகளைக்குறித்த விதிகளில் சொல்லியிருககிறபடி இராவிட்டாலும், அந்த வண்டியின் சொந்தக்காரர் எவ்விதமாகவேனும் இந்த விதிகளுக்கு விரோதமாக நடந்திருந்தாலும், சொந்தக்காரருக்குக் கொடுக்கப்பட்ட அனுமதிச்சீட்டானது ஷ கம்மிஷனரால் செலாவணியாகவொட்டாமல் சிறிது காலத்துக்கு நிறுத்திவைககப்படலாம் அல்லது ரத்துசெய்யப்படலாம்.

7. வாடகை மோடார் வண்டியை ஓட்டுவதற்கான அனுமதிச்சீட்டானது - இந்த விதிகளுடன் சேர்க்கப்பட்டிருக்கும் 1-வது ஷெட்யூலில கண்ட டாக்ஸி B நமூனாபபடி இருக்கவேண்டும்.

8. மேலேகண்ட நமூனாப்படி சென்னை பொலீஸ் கம்மிஷனரால் கொடுக்கப்பட்ட அனுமதிச்சீட்டு வைத்திராத எந்த நபரும் வாடகை மோடார் வண்டியை ஓட்டக்கூடாது.

9. (1) (மோட்டார் வண்டி) ஓட்டுவதற்காகக் கொடுக்கப்பட்டு அந்தந்த காலத்தில் செலாவணியாய்க்கொண்டிருக்கும் ஒரு சாதாரண லைஸென்ஸ் வைத்துக்கொண்டிருக்கிற யாதொரு நபருக்கு மாத்திரமே ஷ அனுமதிச்சீட்டு கொடுக்கப்படும்.

(2) அப்படிப்பட்ட அனுமதிச்சீட்டுக்காக வாங்கப்படும் கட்டணம் ரூ. 2 ஆகும்; மேலும், அது கொடுக்கப்படட தேதியிலிருந்து அதற்கடுத்த மார்ச்மீ 31வ வரையில் செலாவணியாகும்; ஆனால், அது - பொலீஸ் கம்மிஷனரால் ரத்துசெய்யப்பட்டாலும் செலாவணியாகாமல் சிறிது காலத்துக்கு நிறுத்திவைக்கப்பட்டாலும், அல்லது அதை வைத்துக்கொண்டிருப்பவருக்கு (வண்டி) ஓட்டுவதற்காகக் கொடுக்கப்பட்ட சாதாரண லைஸென்ஸானது செலாவணியாகாமல் சிறிது காலத்துக்கு நிறுத்திவைக்கப்பட்டாலும் ரத்துசெய்யப்பட்டாலும் காலம்கடந்துபோய்விட்டாலும், செலாவணியாவது நின்றுபோகும்.

10. டாக்ஸி காப் என்னும் வாடகை வண்டியை ஓட்டுவதற்கான அனுமதிச்சீட்டுக்காக விண்ணப்பஞ்செய்துகொள்ளும் யாதொரு நபர் - வாடகை மோடார் வண்டியை ஓட்ட தாம் எவ்விதத்திலும் தகுதியானவரென்றும், சென்னபட்டணத்திலுள்ள முக்கியமான இடங்களும் தெருக்களும் தமக்குத் தெரியுமென்றும், வாடகைக்காக நிர்ணயிக்கப்பட்டிருக்கும் வீதங்கள் தமக்கு நன்றாகத் தெரியுமென்றும் பொலீஸ் கம்மிஷனருக்குத் திருப்திகரமாய்க் காட்டவேண்டும். ஷ வண்டி ஓட்டுகிறவர் இநத விதிகளையாவது 1916-ம் ஹூ்த்திய சென்னபட்டணத்து மோடார் வண்டிகளைக் குறித்த விதிகளையாவது எவ்விதமாகவேனும் மீறி நடந்தாலும், ஷ வண்டி ஓட்டுவதற்கான அனுமதிச்சீட்டை

வைத்துக்கொண்டிருப்பவர் அதை வைத்துக்கொண்டிருக்கும்படி விடுவது உசிதமல்லவென்று ஏற்படும் விதமாக அவர் துர்நடத்தை நடந்தாலும், அந்த அனுமதிச்சீட்டானது பொலீஸ் கம்மிஷனரால் ரத்துசெய்யப்படலாம் அல்லது செலாவணியாகவொட்டாமல் சிறிதுகாலத்துக்கு நிறுத்திவைக்கப்படலாம்.

11. (1) ஒவ்வொரு வாடகை மோடார் வண்டியிலும், வாடகைக்கு அமர்த்திக்கொள்பவருக்குத் தம்மிடத்திலிருந்து வாங்கப்படத்தக்க சத்தம் இவ்வளவென்று காட்டுவதற்காக அங்கீகாரமான மாதிரியாயுள்ள டாக்ஸி மீட்டர் என்னும் செலுத்தவேண்டிய சத்தத்தைக்காட்டும் கருவியொன்று அமைக்கப்பட்டிருக்கவேண்டும்.

(2) அப்படிப்பட்ட ஒவ்வொரு டாக்ஸி மீட்டருக்கும், பொலீஸ் கம்மிஷனரின் முத்திரையைக்கொண்டாவது அவரால் அங்கீகரிக்கப்பட்ட யாதொரு அடையாளத்தைக்கொண்டாவது முத்திரையிடவேண்டும்.

(3) யாதொரு சொந்தக்காரர், வண்டி ஓட்டுகிறவர், துணையாள் அல்லது வேறே யாதொரு நபர் - டாக்ஸி மீட்டரின்மேல் போடப்பட்டிருக்கும் முத்திரையை உடைத்தாலும், எவ்விதமாகவேனும் அதன் ஜோலிக்குப் போனாலும், அல்லது மோசஞ்செய்யும் உத்தேசத்துடன் டாக்ஸிமீட்டரின் ஜோலிக்காகிலும் அதைச்சேர்ந்த ஓட்டுவதற்கான யந்திரங்களின் ஜோலிக்காகிலும் போனாலும், அவர்-இந்த விதியை மீறிநடந்த குற்றம் செய்ததா எண்ணப்படுவார்.

(4) டாக்ஸி மீட்டரின்மேலிருக்கும் முத்திரைகள் சரியாயிருந்தாலன்றி மற்றப்படி எந்த வாடகை மோடார் வண்டியையும் வாடகைக்கு ஓட்டக்கூடாது.

12. (1) ஒவ்வொரு டாக்ஸி மீட்டரையும் பொலீஸ் கம்மிஷனராவது, இதுவிஷயமாய் அவர் அப்போதைக்கப்போது ஏற்படுத்தியனுப்பக்கூடிய உத்தியோகஸ்தராவது பரீட்சித்துப் பார்க்கவேண்டும்.

(2) டாக்ஸி மீட்டரைப் பார்வையிட ஹாஜர்ப்படுத்துவதற்கு முன்னே, மீட்டரைப் பொருத்தும் (பர்ம்) கம்பெனியார் கம்பிகளுக்குத் துளைகளும் ஈயமுத்திரைகளுக்குக் கம்பிகளும் ஏற்படுத்தவேண்டும்; இந்தப்படி ஏற்படுத்துவதால், பரீட்சை செய்தான பிறகு ஈய முத்திரையை நழுவவிட்டு அவைகளின்மேல் முத்திரைபோடுவதற்கான குறட்டைக்கொண்டு அழுத்தவேண்டியதுமாத்திரமே அவசியமாயிருக்கும்.

(3) தூரத்துக்குச் சம்பந்தப்பட்ட ஸ்கேல்கள் ஒவ்வொன்றின் விஷயமாகவும் ரஸ்தாவில் ஐந்து மைல்தூரம் ஓட்டியும், காத்துக்கொண்டிருப்பதற்காக வாங்கப்படும் சத்த விஷயமாய்க் காலத்தைப் பரீட்சை செய்யும்பொருட்டு அரைமணிநேரத்துக்குக் குறையாமல் நிறுத்திவைத்தும் ஒவ்வொரு டாக்ஸி மீட்டரையும் பரீட்சைசெய்து பார்க்கவேண்டும்.

(4) இந்தப்படி பரீட்சைசெய்து பார்த்ததில் சரியாயிருப்பதாகக் காணப்பட்ட ஒவ்வொரு டாக்ஸி மீட்டருக்கும், முத்திரைகளை அப்புறப்படுத்தாமல் அதைத் திறக்கமுடியாதபடியாவது அதன் ஜோலிக்குப் போகமுடியாதபடியாவது முத்திரையிடவேண்டும்.

13. டாக்ஸி மீட்டரை இயக்கத்துக்குக் காரணமாயிராத ஒரு சக்கரத்துடன் அமைத்து, அந்த சக்கரத்தைக்கொண்டு அந்தக் கருவியை வேலைசெய்விக்கவேண்டும்.

14. மீட்டராவது (transmission gearing) வண்டியின் பல பாகங்களைச் சேர்த்து இயக்கும் உபகரணமாவது ஒவ்வொரு தடவையும் அப்புறப்படுத்தப்படுகிற அல்லது மராமத்து செய்யப்படுகிறபோது, பொலீஸ் கம்மிஷனருடைய உத்தரவின்பேரில் வண்டியை மறுபடியும் ரஸ்தாவில் ஓட்டிப் பரீட்சித்துப் பார்க்கவேண்டும்.

ஆனால், பொலீஸ் கம்மிஷனருடைய உத்தரவின்படி பரீட்சித்துப்பார்க்கும் காரியத்துக்காக டாக்ஸி மீட்டரை எந்தக் காலத்திலும் அவருக்கு அனுப்பவேண்டும்.

15. வண்டியை நிறுத்துவதற்காக அல்லது செலுத்துவதற்காக ஏற்பட்டு அச்சாணிகளைக்கொண்டு பிகியப்பட்டிருக்கும் சகல இணைப்புகளிலும் அந்த அச்சாணிகளுக்கு சுரை போட்டு பந்தோபஸ்து செய்யவேண்டும்; மேலும், இந்த சுரை விழுந்துவிடாதபடி அதை நன்றாய் இணைக்கவேண்டும் அல்லது ஆணிவைத்து பிகியவேண்டும்.

16. வாடகைவண்டியின் யந்திர சம்பந்தமான சகல பாகங்களும் நிஷ்கரிஷையான காலத்துக் கொருமுறை பார்வையிடப்பட்டு சரியாய் வேலைசெய்யும் ஸ்திதியில் இருக்கும்படி பார்த்துக்கொள்வது அந்த வண்டியின் சொந்தக்காரருடைய கடமையாகும்; அந்தப்படி பார்வையிட்டதைக் குறித்துவைக்கும்பொருட்டு பொலீஸ் கம்மிஷனரால் நிர்ணயிக்கப்படும் நமூனாப்படி ஒரு ரெஜிஸ்டர் வைத்துவரவேண்டும். பொலீஸ் கம்மிஷனராலாவது அவரால் கிரமமாய் அதிகாரம் கொடுக்கப்பெற்ற யாதொரு நபராலாவது எந்தக் காலத்திலும் பார்வையிடக்கூடியபடி இந்த ரெஜிஸ்டரை வைத்திருக்கவேண்டும். இந்த ரெஜிஸ்டர வைத்துவரவோ சட்டப்படி ஏற்பட்ட அதிகாரியானவர் அதைக் காட்டும்படி கேட்கும்போது காட்டவோ யாதொரு நபர் தவறினால், அவர் - இந்த விதியை மீறிநடந்ததாக எண்ணப்படுவார்.

17. ஒவ்வொரு வாடகை மோடார் வண்டியின் யந்திர உபகரணங்களும் சப்தமாவது அதிர்ச்சியாவது மிகவும் அதிகமாய் உண்டாகாதபடி அமைக்கப்பட்டிருக்கவேண்டியதுமல்லாமல், எல்லாக் காலங்களிலும் அவை அதே நிலைமையிலிருக்கும்படி பார்த்துக்கொள்ளவும்வேண்டும்.

18. தளர்ச்சியாயிராதபடியோ கலகல என்ற எவ்வித சப்தமாகிலும் விசேஷமாய் உண்டாகாதபடியோ வண்டியின் இசைப்புகளை வைத்திருக்கவேண்டும்.

19. ஒவ்வொரு வாடகை மோடார் வண்டியிலும் இராக்காலத்தில் டாக்ஸி மீட்டரின் மேல் வெளிச்சம் படும்படியாக விளக்கு போட்டிருக்கவேண்டும்.

20. சுற்றிலும் மூடியிருக்கும் ஒவ்வொரு வாடகை மோடார் வண்டியிலும், பிரயாணியும் வண்டி ஓட்டுகிறவரும் பேசுவதற்கு வேண்டிய சாதனங்கள் அமைக்கப்பட்டிருக்கவேண்டும்.

21. நியாயமான அளவுக்குப் பிரயாணிகளின் மூட்டை முதலியவைகளை ஏற்றிக்கொண்டு போவதற்காகவும் அவைகளை ஜாக்கிரதையாய் வைத்திருப்பதற்காகவும் ஏற்பாடு செய்திருக்கவேண்டும்.

22. உட்காருமிடங்களிலிருக்கும் மெத்தைகளைப் பொலீஸ் கம்மிஷனராலாவது அவரால் அதிகாரம் கொடுக்கப்பெறும் உத்தியோகஸ்தராலாவது அங்கீகரிக்கப்படும் தகுதியான வஸ்துவைக்கொண்டு நிரப்பி அவைகளுக்கு உரைபோடவேண்டும்.

23. யாதொரு வாடகை மோடார் வண்டியின் கதவுகள், ஜன்னல்கள், உட்காருமிடங்கள், மேல்பாகம், வில்லுகள், சக்கரங்கள், மெத்தைகள், விளக்குகள், பானல்கள் (இரக்கை) முதலியவைகளும், அதைச்சேர்ந்த சகல தட்டுமுட்டுகளும் மூஸ்தீதுகளும் சரியான ஸ்திதியிலும் நிலைமையிலும் இருக்கவேண்டும்; மேலும், அந்த வண்டிக்குச் சரியாய் வர்ணம் கொடுத்து (வார்னிஷ்) மெருகெண்ணெய் பூசியிருப்பதுமல்லாமல், உட்புறம் முற்றிலும் சுத்தமாயிருக்கவும் வேண்டும். அதன் அடியில் ரப்பரைக்கொண்டாவது நாரைக்கொண்டாவது தகுதியான வேறே வஸ்துவைக்கொண்டாவது செய்யப்பட்ட பாய் போட்டிருக்கவேண்டும்.

24. பொலீஸ் கம்மிஷனரானவர் - யாதொரு வாடகை மோடார் வண்டியானது வாடகைக்கு ஓடுவதற்குத் தகுதியாயில்லையென்று அபிப்பிராயப்பட்டால், அதிலுள்ள குறைகள் அவருக்குத் திருப்திகரமாகப் பரிகரிக்கப்படுகிறவரையிலே அந்த வண்டியை உபயோகிக்கக்கூடாதென்று தடுக்கலாம்.

25. (1) ஒவ்வொரு வாடகை மோடார் வண்டியிலும் இவ்வளவு பாரம் ஏற்றிக்கொண்டு போகலாமென்பதை லைஸென்ஸ் கொடுக்கும் உத்தியோகஸ்தர் நிஷ்கரிஷை செய்யவேண்டும்.

(2) யாதொரு டாக்ஸி காபில் இத்தனை நபர்களையும் இவ்வளவு எடையுள்ள மூட்டை முதலியவைகளையும் ஏற்றிக்கொண்டுபோக லைஸென்ஸ் கொடுத்திருக்கிறதென்று அந்த வண்டியின் நன்றாய்த் தெரியும்படியான ஒரு இடத்தில் வர்ணத்தால் எழுதிவைக்கவேண்டும்.

(3) டாக்ஸி காபாக ஓடிக்கொண்டிருக்கும் மோடார் வண்டியின் ரெஜிஸ்டர் செய்யப்பட்ட நம்பரை, லைஸென்ஸ் கொடுக்கும் அதிகாரி நிர்ணயிக்கக்கூடிய மாதிரியாய் வண்டியின் முன்புறத்திலும் பின்புறத்திலும் நன்றாய்த் தெரியும்படியான இடத்தில் காட்டவேண்டும்.

26. (1) வாடகை மோடார் வண்டி ஓட்டுகிறவர் - அவருக்குப் பொலீஸ் கம்மிஷனரால் கொடுக்கப்பட்ட நம்பர்போட்ட பில்லை ஒன்றை அவருடைய மார்பின் இடது பக்கத்தில் நன்றாய்த் தெரியும்படியான ஒரு இடத்திலே அணிந்துகொள்ளவேண்டும்.

(2) வாடகை மோடார் வண்டி ஓட்டுகிறவர் - அவருடைய அனுமதிச்சீட்டு செலாவணியாகவொட்டாமல் நிறுத்திவைக்கப்படுவதன்மேலாவது ரத்துசெய்யப்படுவதன்மேலாவது அதன் காலம் கடந்துபோவதன்மேலாவது அந்த பில்லையைக் கொடுத்துவிடவேண்டும்.

(3) வண்டி ஓட்டுகிறவர் எவராவது அந்த பில்லையை இழந்துவிட்டாலும் அதைத் திருப்பிக்கொடுத்துவிடத் தவறினாலும், அவர் பொலீஸ் கம்மிஷனரால் நிஷ்கரிஷைசெய்யப்படும் கட்டணம் செலுத்தவேண்டியவராவார்.

இழந்துபோன பில்லைகளுக்கு பர்த்தியாக வேறே பில்லைகள் வேண்டுமானால், அவைகளுக்காக கட்டணம் செலுத்தப்படுவதன்மேல் அவை கொடுக்கப்படும்.

(4) வண்டி ஓட்டுகிறவர் எப்படிப்பட்ட சந்தர்ப்பத்திலும் தம்முடைய அனுமதிச்சீட்டையாவது பில்லையையாவது இரவல்கொடுக்கவுங்கூடாது மற்றொருவருக்கு மாற்றவுங்கூடாது.

27. வண்டி ஓட்டுகிறவர் - தம்முடைய இருப்பிடம் எப்போதாவது மாறுகிற பட்சத்திலே அதைக்குறித்து ஒரு வாரத்துக்குள் பொலீஸ் கம்மிஷனருக்குத் தெரிவிக்க வேண்டும்.

28. யாதொரு வாடகை மோடார் வண்டி ஒட்டுகிற ஒவ்வொரு நபரும் அல்லது அதி லுள்ள ஒவ்வொரு துணையாளும் - பொலீஸ் கம்மிஷனரால் அங்கீகரிக்கப்படும் விவரப்படிக் குள்ள ஒரே மாதிரியான உடையைத் தக்கபடியும் சுத்தமாகவும் தரித்துக்கொண்டிருக்க வேண்டும்.

29. வண்டி ஓட்டுகிறவர்கள் - வாடகை மோடார் வண்டிகள் நிற்குமிடங்களில் அடி யிற்கண்ட விதிகளை அனுசரிக்கவேண்டும்:—

(1) ஷை இடத்திலுள்ள முதலிரண்டு வாடகை மோடார் வண்டிகளை ஓட்டுகிறவர் கள் - தங்களுடைய வண்டிகளின் பக்கத்தில் இருக்கவேண்டியதுமல்லாமல், யாதொரு நப ரால் உடனே வாடகைக்கு அமர்த்திக்கொள்ளப்படுவதற்குத் தயாராய் இருக்கவும்வேண் டும்; ஆனால், வாடகைக்கு அமர்த்திக்கொள்ளும் எந்த நபராவது - ஷை வண்டிகள் நிற்கு மிடத்திலுள்ள குறித்த யாதொரு வண்டியை வாடகைக்கு அமர்த்திக்கொள்ள விரும்பினால் அந்தப்படியே அமர்த்திக்கொள்ளலாம்.

(2) ஷை வண்டிகள் நிற்குமிடத்தில் காலிஸ்தானங்கள் ஏற்படும்போது அங்குள்ள சகல வாடகை மோடார் வண்டிகளும் முன்னுக்கு வரவேண்டும்.

(3) பிற்பாடு எப்போதாகிலும் உபயோகித்துக்கொள்வதற்காக அமர்த்திக்கொள் ளப்பட்டிருக்கும் எந்த வாடகை மோடார் வண்டியும் - அதை ஓட்டுகிறவர் மத்திய காலத் தில் எவராகிலும் வாடகைக்கு அமர்த்திக்கொள்வதை ஒப்புக்கொள்ள இஷ்டப்பட்டா லன்றி மற்றப்படி, வண்டிகள் நிற்குமிடத்தில் இருக்கக்கூடாது.

(4) எந்த வாடகை மோடார் வண்டியாவது ஓடமுடியாதபடி கெட்டுப்போய், அந்தக் குறைவு நீடித்திருப்பதாயிராமல் சிறிது காலத்துக்கு மாத்திரமே இருக்கக்கூடிய தாயும் உடனே சரிப்படுத்தப்படக்கூடியதாயுமிருந்து உடனே சரிப்படுத்தப்பட்டாலன்றி மற்றப்படி, அந்த வண்டியானது வண்டிகள் நிற்குமிடத்தில் இருக்கக்கூடாது.

30. (1) ஒவ்வொரு டாக்ஸி மீட்டருக்கும் கொடிரூபமாகவுள்ள அடையாளக் கருவி அல்லது பிடி ஒன்று இசைத்திருக்கவேண்டும். அதன்மேல் 'வாடகைக்கு விடப்படும்' என்னும் வார்த்தைகள் அச்சிட்டிருக்கவேண்டும். அடையாளக் கருவி செங்குத்தாயிருக் கும்போது டாக்ஸி மீட்டர் வேலை செய்யாதிருக்கும்படியாக டாக்ஸி மீட்டரில் ஏற்பாடு செய்திருக்கவேண்டும். அப்படிப்பட்ட அடையாளக் கருவியை வண்டிக்கு வெளியிலும் அதற்கு எதிரிலுமுள்ள யாதொரு நபருக்கும், வண்டிக்குள்ளேயிருக்கும்போது வாடகைக்கு வைத்துக்கொண்டவருக்கும் ஸ்பஷ்டமாய்த் தெரியும்படியாக அமைக்கவேண்டும்.

(2) (ஷை அடையாளக் கருவியின்) செங்குத்தான நிலைமை வண்டி வாடகைக்குக் கிடைக்கும் என்பதைக் குறிக்கும்; மேலும், வண்டி ஓட்டுகிறவர் எவரும் - அடையாளக் கருவி செங்குத்தான நிலைமையில் இருக்கும்போது நியாயமான காரணமில்லாமல் வாட கையை ஒப்புக்கொள்ள மறுக்கக்கூடாது.

31. ஒவ்வொரு வாடகை மோடார் வண்டி ஓட்டுகிறவரும் தாம் வாடகைக்கு அமர் த்திக்கொள்ளப்பட்டவுடனே - டாக்ஸி மீட்டரை இயங்கச்செய்யவேண்டுமேயொழிய அத ற்கு முன் அந்தப்படி செய்யக்கூடாது; மேலும், அந்த வாடகை முடிவானவுடன் அதை நிறுத்திவிடவேண்டும். அவர் அந்தப்படி செய்யும் விஷயத்தில் அசட்டையாயிருந்தாலும் அந்தப்படி செய்யத்தவறிப்போனாலும், அவர் இந்த விதியை மீறி நடந்திருப்பதாக எண் ணப்படுவார். ஆனால், வாடகை மோடார் வண்டிகளை விட்டுவைத்திருக்கும் இடத்திலி ருந்தாவது அவைகள் நிற்குமிடத்திலிருந்தாவது 500 கெஜ தூரத்துக்குக் குறைவாகவுள்ள யாதொரு இடத்திலிருக்கும் ஒரு பிரயாணியை ஏற்றிக்கொண்டுபோவதற்காக ஷை வண்டி கள் விட்டுவைத்திருக்கும் அல்லது நிற்கும் ஸ்தானத்திலிருந்து ஒரு வண்டி அழைத்துப் போகப்பட்டால், அந்த மோடார் வண்டியானது அந்த இடத்தில் வந்துசேர்ந்து பிரயா ணியை ஏற்றிக்கொள்ளத் தயாராயிருக்கிற வரையிலே டாக்ஸி மீட்டரை இயங்கச்செய்யக் கூடாது. ஆயினும், யாதொரு வாடகை மோடார் வண்டியானது வாடகைக்கு அமர்த்திக் கொள்ளப்பட்டிருக்கும்போது அதிலுள்ள யாதொரு யந்திர ஏற்பாடு கெட்டுப்போயிருப் பது காரணமாகவோ அதன் சக்கரத்தின்மேலுள்ள கட்டிலே பழுது நேரிட்டிருப்பது கார ணமாகவோ சிறிது காலத்துக்காகிலும்சரி மற்றப்படியாகிலும்சரி ஓட முடியாமற்போகிற பட்சத்திலே, அந்த வண்டி ஓட்டுகிறவர் - வாடகைக்கு அமர்த்திக்கொள்ளுகிறவருக்கு நஷ்டம் ஏற்படாதபடி, டாக்ஸி மீட்டர் சம்பந்தமான யந்திர ஏற்பாட்டை உடனே நிறுத்தி விட்டு, அந்தக் குறைவு பரிகரிக்கப்படுகிறவரையில் அதை மறுபடியும் இயங்கும்படி செய்யக்கூடாது.

32. வண்டி ஓட்டுகிறவர் - வாடகைக்கு அமர்த்திக்கொள்பவர் போய்ச்சேரவேண்டிய தாகக் குறிப்பிடும் இடத்துக்கு அதிசமீபமாயிருப்பதும் அதிவிரைவாகப் போகக்கூடியது மான மார்க்கமாக வண்டியை ஓட்டிக்கொண்டுபோகக்கூடாதென்பதற்கு நியாயமான கார ணம் இராதபட்சத்திலே, அந்த மார்க்கமாகவே ஷை இடத்துக்குப் போகவேண்டும்.

33. யாதொரு வாடகை மோடார் வண்டி ஓட்டுகிறவர்—

(a) தம்முடைய வேலையில் அமர்ந்திருக்கும்போது குடித்திருக்கக்கூடாது ;

(b) பழிப்புக்கிடமான அல்லது தூஷணையான வார்த்தைகளை உபயோகிக்கவுங் கூடாது, அப்படிப்பட்ட சைகை காட்டவுங்கூடாது ;

(c) யாதொரு ராப்தாவான தெருவிலாவது பாட்டையிலாவது யாதொரு பொது வான இடத்திலாவது (வண்டிகள் நிற்கும் யாதொரு இடம் அல்லது இதற்கென்று ஏற் படுத்தப்பட்ட வேறே யாதொரு இடம் தவிர மற்ற இடங்களிலே) வாடகைக்கு அமர்த்திக் கொள்ளப்படும் காரியத்துக்காக நிற்கவுங்கூடாது, இங்குமங்கும் திரிந்துகொண்டிருக்கவுங் கூடாது ;

(d) வேறே யாதொரு வண்டி போவதற்கு (அவா நியாயமாயும் சௌகரியமாயும் வழிவிடக்கூடிய சந்தர்ப்பங்களிலே) வழிவிட மறுக்கக்கூடாது ;

(e) வேறே யாதொரு வாடகை மோடார் வண்டி ஓட்டுகிறவர் யாதொரு நபரை அந்த வண்டியில் ஏற்றும்போதாவது அதிலிருந்து இறக்கும்போதாவது வேண்டுமென்றே அவரைத் தடுக்கவுங்கூடாது அவருக்குத் தடை செய்யவுங்கூடாது ;

(f) வேறே யாதொரு வாடகை மோடார் வண்டி வாடகைக்கு அமர்த்திக்கொள்ளப் படாதபடி அந்த வண்டி ஓட்டுகிறவரை அக்கிரமமாய்த் தடுக்கவுங்கூடாது தடுக்க உத்தே சிக்கவுங்கூடாது ;

(g) அவர் நியாயமாய்ச் சட்டப்படி என்ன சத்தம் பெற்றுக்கொள்ள அர்ஹராயி ருக்கிறாரோ அதற்கு அதிகமாய்க் கொடுக்கும்படி கேட்கவுங்கூடாது ;

(h) வாடகைக்கு அமர்த்திக்கொண்டவரால் அவர் விடுவிக்கப்படுவதற்குமுன்னே, வாடகைக்கு ஒப்புக்கொண்ட பயணத்தைவிட்டுப் போகவுங்கூடாது ;

(i) பொதுஜன உபயோகத்துக்குத் தற்காலத்தில் தகுதியற்றதாயிருக்கும் யாதொரு வாடகை மோடார் வண்டியை வைத்துக்கொண்டு வாடகைக்கு ஓட்டவுங்கூடாது ;

(j) பொது ஜனங்களையோ வாடகைக்கு அமர்த்திக்கொள்ளக்கூடிய ஒரு நபரையோ கவனிக்கும்படி செய்யும்பொருட்டு கூச்சல்போடவுங்கூடாது, வேறே எந்தக் காரணத்தி னாலும் பொதுஜனங்களுக்கு அசௌகரியமோ தொந்தரவோ உண்டாகும்விதமாக நடந்து கொள்ளவுங்கூடாது.

34. அமுலுக்குக்கொண்டுவரப்படக்கூடியதாய் இதற்கு விரோதமாகவுள்ள யாதொரு ஒப்பந்தம் ஏற்பட்டிராதபட்சத்திலே, யாதொரு வாடகை மோடார் வண்டியை வாடகை க்கு அமர்த்திக்கொள்ளும் எந்த நபரும் அந்தப்படி அமர்த்திக்கொண்டதற்கு சட்டப்படி சேரவேண்டிய சத்தத்தைக் கொடுக்க மறுக்கவுங்கூடாது கொடுக்கத் தவறிப்போகவும் கூடாது ; மேலும், சத்தத்தின் சம்பந்தமாக விவாதம் உண்டாகிற விஷயத்திலே, அவர் தம்முடைய சரியான பெயரையும் மேல்விலாசத்தையும் வண்டி ஓட்டுகிறவருக்குத் தெரி விக்க மறுக்கவுங்கூடாது.

---

## முதலாவது ஷெட்யூல்.

(1)

டாக்ஸி A நமூனு.

கூ.

வாடகைக்கு விடப்படுகிற அல்லது வாடகைக்கு ஓடிக்கொண்டிருக்கிற மோடார் வண்டிகளின் சொந்தக்காரருக்குக் கொடுக்கப்படும் அனுமதிச்சீட்டு.

கட்டணம் ... ... ஐந்து (5) ரூபாய்.

(1921-ம்ஸூ த்திய சென்னபட்டணத்து வாடகை மோடார்வண்டிகளைக்குறித்த விதிகளில் 4-வது விதியின்படி.)

ல் வசிக்கும் மிஸ்டர்
க்கு, ஷ்டி விதிகளில் கண்ட திட்டங்களின்பேரில் அடியிற்கண்ட ரெஜிஸ்டர் நம்பருள்ள மோடார் வண்டியை, இந்த அனுமதிச்சீட்டின் தேதியிலிருந்து 19 -ம்ஸூ மார்ச்ஸீ 31உவரையில், வாடகைக்கு விடவோ அல்லது வாடகைக்கு ஓட்டிக்கொண்டிருக்கவோ அனுமதி கொடுக்கப்படுகிறது ; ஆனால், ஷ்டி மார்ச்ஸீ 31உக்கு முன் இந்த அனுமதிச்சீட்டு ரத்து செய்யப்பட்டாலும் செலாவணியாகவொட்டாமல் நிறுத்திவைக்கப்பட்டாலும், அந்தப்படி கொடுக்கப்பட்ட அனுமதி செல்லாது.

மோடார வண்டியின் ரெஜிஸ்டர் செய்யப்பட்ட நம்பர்—

இந்த வண்டியில், வண்டி ஓட்டுகிறவரும் மொத்தத்தில் பவுண்டுக்கு மேற் படாமல் மூட்டை முதலியவைகளுமல்லாமல் பிரயாணிகளையும் ஏற்றிக்கொண்டு

போக லைஸென்ஸ் கொடுத்திருக்கிறது. நிர்ணயிக்கப்பட்டபடி மொத்தத்தில் எத்தனை பிரயாணிகள் இருக்கலாமோ அதற்குக் குறைவாயிருந்தால், ஒவ்வொரு பிரயாணிக்கு பர்த்தியாகவும்         பவுண்ட் எடையளவுக்கு சாமான்கள் அல்லது மூட்டை முதலியவைகளை ஏற்றிக்கொண்டு போகலாம்.

தேதி,

பொலீஸ் கம்மிஷனர்,
சென்னபட்டணம்.

புதிப்பித்த விஷயங்கள்.

| எந்த தேதிவரையில் புதிப்பிக்கப் பட்டது. | கையெழுத்து. | தேதி. |
|---|---|---|
| | | |

(2)

டாக்ஸி B நமூனு.

(வாடகை மோடார் வண்டி ஓட்டுகிறவருக்குக் கொடுக்கப்படும் அனுமதிச்சீட்டு.)

அனுமதிச்சீட்டு, பில்லை நெ.                    கட்டணம்—இரண்டு ரூபாய் (ரூ. 2).

(வண்டி ஓட்டுகிறவனுடைய (போடொக்ராப) சாயாபடம்.)

(1921-௵த்திய சென்னபட்டணத்து வாடகை மோடார் வண்டிகளைக் குறித்த விதிகளில் 7-வது விதியின்படி.)

ல் வசிக்கும் மிஸ்டர்                    க்கு

ஷை விதிகளில் கண்ட திட்டங்களுக்குட்பட்டு இந்த அனுமதிச்சீட்டின் தேதியிலிருந்து 19    -௵ மார்ச் ௴ 31௳ வரையில சென்னை ராஜதானிப்பட்டணத்திலும் அதற்குச் சமீபமாயுள்ள இடங்களிலும் வாடகை மோடார் வணடி ஓட்டுவதற்கு அனுமதி கொடுக்கபபடுகிறது ; ஆனால், ஷை மார்ச் ௴ 31உக்கு முன் இந்த அனுமதிச்சீட்டு ரத்து செய்யபபட்டாலும் செலாவணியாகவொட்டாமல் நிறுத்திவைக்கப்பட்டாலும் அந்தப்படி சொடுக்கப்பட்ட அனுமதி செல்லாது.

தேதி,

பொலீஸ் கம்மிஷனர்.

புதிப்பித்த விஷயங்கள்.

| எந்தத் தேதி வரையில் புதுப்பிக்கப் பட்டது. | கையெழுத்து. | தேதி. |
|---|---|---|
| | | |

(3)

டாக்ஸி C நமூனு.

மோடார் வண்டியை வாடகைக்கு விடவோ அல்லது வாடகைக்கு ஓட்டிக்கொண்டிருக்கவோ சொந்தக்காரருக்குக் கொடுக்கப்படும் அனுமதிச்சீட்டுக்காகச் செய்துகொள்ளும் விண்ணப்பம்—

(1) பெயர்.
(2) மேல்விலாசம்.
(3) மோடார் வணடியின் ரெஜிஸ்டர் செய்யப்பட்ட நம்பர்.
(4) வண்டியில் இத்தனை பேர் உட்காரலாமென்பது.

தேதி,

கையெழுத்து.

குறிப்பு.—வாடகை மோடார் வண்டியானது - சரியான நிலைமையிலும் விதிகளில் சொல்லியிருக்கிறபடி பூர்த்தியான இசைப்புகளுடனும் மூஸ்தீதுகளுடனும் ஹாஜர்ப்படுத்தப்படவேண்டும.

(4)

டாக்ஸி D நமூனு.

வாடகை மோடார் வண்டி ஓட்டுகிறவருக்குக் கொடுக்கப்படும் அனுமதிச்சீட்டுக்காகச் செய்துகொள்ளும் விண்ணப்பம்—

(1) விண்ணபபதாரரின் பெயர்.
(2) தகப்பனார் பெயர்.

(3) மேல்விலாசம்.
(4) வண்டி ஓட்டுகிறவருக்குக் கொடுக்கப்படும் சாதாரண லேஸென்ஸின் நம்பர்.

தேதி, கையெழுத்து.

குறிப்பு.—கட்டணம் 2 ரூபாயும் விண்ணப்பதாரருடைய சாயாபடத்தின் பிரதிகள் இரண்டும் அனுப்பப்படவேண்டும்.

கொடுக்கப்பட்ட அனுமதிச்சீட்டின் நம்பர்.

தேதி, வாடகை மோடார் வண்டி சம்பந்தமாகவுள்ள குமாஸ்தா.

## இரண்டாவது ஷெட்யூல்.

மோடார் வண்டிகளை வாடகைக்கு விடுவதற்காவது அவைகளுக்காக சத்தம் வாங்குவதற்காவது அடியிற்கண்ட வீதங்கள் நிர்ணயிக்கப்படுகின்றன :—

1. சென்னபட்டணத்து மியுனிஸிபல் ஹத்துக்குள் காலை 6 மணி முதல் இரவு 10 மணிவரையில் போகும் தூரத்திலே முதல் மைலுக்கு மைலொன்றுக்குப் பத்து அணா வீதமும், அதற்குப் பிறகு போகும் தூரத்தில் மைலின் ஐந்தில் ஒரு பாகத்துக்கு இரண்டு அணா வீதமும் வாங்கப்படும்.

2. சென்னபட்டணத்து மியுனிஸிபல் ஹத்துக்குள் இரவு 10 மணிமுதல் காலை 6 மணிவரையில் போகும் தூரத்திலே முதல் மைலுக்குப் பன்னிரண்டு அணாவும், அதன் பிறகு போகும் தூரத்தில் மைலின் ஆறில் ஒரு பாகத்துக்கு இரண்டு அணா வீதமும் வாங்கப்படும்.

3. அப்படிப்பட்ட யாதொரு மோடார் வண்டியானது நான்கு பேர்களால் உபயோகிக்கப்பட்டாலுஞ்சரி அதற்குக் குறைந்த நபர்களால் உபயோகிக்கப்பட்டாலுஞ்சரி, மேற்படி வீதங்களே வாங்கப்படும். அந்த வண்டியில் ஏற்றிக்கொண்டு போகப்படும் 20 பவுண்டுக்கு அதிகமான எடையுள்ள ஒவ்வொரு சிப்பத்துக்கும் இரண்டு அணா வாங்கப்படும். மொத்தத்தில் எத்தனை பிரயாணிகள் உட்காரலாமென்று நிர்ணயித்திருக்கிறதோ அதற்குக் குறைவாயிருந்தால், ஒவ்வொரு பிரயாணிக்கு பர்த்தியாகவும் 100 பவுண்ட் எடை அளவுக்கு சாமான்கள் அல்லது மூட்டை முதலியவைகளை இலவசமாய் ஏற்றிக்கொண்டுபோகலாம்.

4. பகலிலாகிலும் இரவிலாகிலும் வண்டி காத்துக்கொண்டிருப்பதற்கு நான்கு நிமிஷங்களுக்கு இரண்டு அணா வீதம் வாங்கப்படும்.

5. மியுனிஸிபல் ஹத்துக்கு அப்பாலுங்கூட இதே வீதங்கள் வாங்கப்படும்; ஆனால், அந்த ஹத்துக்கு வெளியே வண்டி விடுவிக்கப்பட்டால், அது மியுனிஸிபல் ஹத்துக்கு வந்து சேருகிறவரையிலுள்ள தூரத்துக்கு ஒவ்வொரு மைலுக்கும் அல்லது அதன் பாகத்துக்கும் எட்டு அணா வீதம் கட்டணம் வாங்கப்படும்.

6. எவ்விடத்துக்கு வாடகை மோடார் வண்டி வேண்டியிருக்கிறதோ அவ்விடத்திலிருந்து 500 கெஜத்துக்கு அதிகமான தூரத்திலுள்ள அப்படிப்பட்ட வண்டிகள் நிற்கும் இடத்திலிருந்தாவது அவைகளை விட்டுவைத்திருக்கும் இடத்திலிருந்தாவது அவைகளில் ஒன்றை உடனே கொண்டுவரும்படி உத்தரவுசெய்தால், ஷை வண்டிகள் நிற்கும் இடத்திலிருந்து அல்லது அவைகளை விட்டுவைத்திருக்கும் இடத்திலிருந்து வண்டி வேண்டியிருக்கும் இடத்துக்குள்ள தூரத்துக்காகக் கட்டணம் வாங்கப்படும். ஆயினும், வண்டி வேண்டியிருக்கும் இடத்தில் அது வந்து சேர்ந்து பத்து நிமிஷம் ஆனபிறகுதான் வண்டி காத்துக்கொண்டிருப்பதற்காக வாங்கப்படும் கட்டணம் கணக்கிடப்படும்.

குறிப்பு.—மீட்டரை 'ப்ரேக்டௌன்' என்னும் நிலைமையில் வைப்பதால் இந்தப்படி செய்யக்கூடும்.

வாடகை மோடார் வண்டிகள் நிற்கும் இடத்திலிருந்தாவது அவைகளை விட்டுவைத்திருக்கும் இடத்திலிருந்தாவது கொண்டுவரும்படி உத்தரவு செய்து குறிப்பிட்ட ஒரு காலஅளவுக்கு அமர்த்திக்கொள்ளப்பட்டிருக்கும் ஒரு வண்டியின் விஷயத்திலுங்கூட இந்த விதி பிரயோகப்படும்.

7. மியுனிஸிபல் ஹத்துக்குட்பட்ட எந்த இடத்திலாகிலும் வாடகைமோடார் வண்டி விடுவிக்கப்பட்டால், அந்த இடத்திலிருந்து அது மோடார் வண்டிகள் நிற்கும் இடத்துக்காகிலும் அவைகளை விட்டுவைத்திருக்கும் இடத்துக்காகிலும் திரும்பிப் போவதற்குக் கட்டணம் எதுவும் வாங்கக்கூடாது.

8. குறைந்தபட்சம் ஒரு ரூபாய் சத்தம் வாங்கப்படும்.

பி. ஸி. டட்,
கவர்ன்மென்ட் ஆக்டிங் ஸெக்ரெடரி.

(A true translation)

C. N. SARAVANA MUDALIYAR,
*Tamil Translator to Government.*

MADRAS: PRINTED AND PUBLISHED BY THE SUPERINTENDENT, GOVERNMENT PRESS.